# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 12,118 — 1960 අප්‍රේල් 27 වැනි බදාදා — 27.4.1960

12,118 ம் இலக்கம் — 1960 ம் ஆண்டு ஏப்றில் மாதம் 27 ந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## விலைக் கட்டளைகள்

உணவு விலைக் கட்டளை இலக்கம் வி. 61. அரிசி

### 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

#### கட்டளை

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 3 (2) ம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 4 ம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு வவுனியாமாவட்ட உதவி விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி (உணவு), பரமானந்தம் செல்வரத்தினம் ஆகிய நான் இக்கட்டளையால் :—

(1) 1959 ம் ஆண்டு ஆடிமாதம் 31 ம் திகதியைக் கொண்ட 11,824 ம் இலக்க விசேட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் 1959 ம் ஆண்டு ஆடிமாதம் 28 ம் திகதியைக்கொண்ட 49 ம் இலக்கமுள்ள எனது உணவு விலைக்கட்டளையை உடனே இன்று துவக்கம் எடுத்துவிடுகிறேன்.

(2) இதனோடிருக்கும் முதலாம் அட்டவணையில் 3 ம் பத்தியில் விபரிக்கப்பட்டிருக்கும் ஒரு மொத்த அந்தர் ஒன்றின் மொத்த விலையையும் மேற்படி 2 ம் அட்டவணையில் 2 ம் பத்தியில் குறித்த விலையுடன் சேர்த்தால் அவ்வப்பகுதியில் கூட்டிவிற்கும் மொத்த விலையாகவே கருதவேண்டும்.

(3) இதனோடிருக்கும் முதலாம் அட்டவணையில் 4 ம் பத்தியில் விபரிக்கப்பட்டிருக்கும் ஒரு நிகர றுத்தலின் சில்லறை விலையையும் மேற்படி 2 ம் அட்டவணையில் 3 ம் பத்தியில் குறித்த விலையுடன் சேர்த்தால் அப்பகுதியில் கூட்டிவிற்கும் நிகர றுத்தல் ஒன்றின் சில்லறை விலையாகவே கருதப்படும்.

(4) (அ) அரிசியில் எத்தொகையாவது திருப்பி விற்பனை செய்தற்கு விற்றல் மொத்த விலையாகவே கருதப்படும் என்றும் ;

(ஆ) அரிசியில் எத்தொகையாவது பாவிப்பதற்கு விற்றல் சில்லறை விலை விற்பனையாகவே கருதப்படுமென்றும் ஆஞ்ஞையிடுகிறேன்.

(5) இக்கட்டளையால் அரிசியின் ஆகக்கூடிய விலை நிர்ணயிக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு இடங்களினும், எவ்விடத்திலாவது, தம் வசத்திலோ அல்லது தமது கட்டுப்பாட்டிலோ மேற்படி பொருளை வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் இக்கட்டளையால் விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகளைக் காட்டும் அறிவித்தல் ஒன்றைப் பகிரங்கமான இடத்தில் தொங்கவிட வேண்டுமென்பதை, ஆஞ்ஞையிடுகிறேன்.

(6) இக்கட்டளையால் அரிசியின் விலை விதிக்கப்பட்டுள்ள எந்த இடத்திலும் இப்பொருட்களை மொத்த விலைக்கோ அல்லது சில்லறை விலைக்கோ விற்கும் ஒவ்வொருவரும் அப்பொருளை வாங்குவோர் கேட்கும் இடத்தில் அன்னாருக்கு பின்வரும் விபரங்களைக் குறிக்கும் பற்றுச் சீட்டொன்றைக் கொடுக்க வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(அ) விற்பனை நடந்த திகதி ;

(ஆ) விற்ற அரிசியின் தொகை ;

(இ) விற்ற அரிசிக்குக் கொடுக்கப்பட்ட விலை ;

(ஈ) விற்பனையின் விபரம் அதாவது சில்லறை விற்பனையா அல்லது மொத்த விற்பனையா என்பது.

1960 ம் ஆண்டு சித்திரை மாதம் 20 ந் திகதி முற்பகல் 10 மணிக்கு வவுனியாக் கச்சேரியில் கையொப்பமிடப்பட்டது.

ப. செல்வரத்தினம்,
உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு),
வவுனியா.

#### முதலாம் அட்டவணை

வவுனியா தெற்கு (தமிழ்) பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவுக்குச் சேர்ந்த ஆசிகுளம், வவுனியா, நொச்சிமோட்டை, நெடுங்குளம், புதுக்குளம்.

வவுனியா தெற்கு (சிங்கள) பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவுக்குச் சேர்ந்த மடுக்கந்தையும் ஈரப்பெரியகுளமும்.

| பத்தி 1<br>இல. | பத்தி 2<br>விபரம் | பத்தி 3<br>நிகர அந்தர் ஒன்றுக்கு ஆகக்கூடிய மொத்த விலை | பத்தி 4<br>நிகர றுத்தல் ஒன்றின் ஆகக்கூடிய சில்லறை விலை |
|---|---|---|---|
| | | ரூ. ச. | ரூ. ச. |
| 1 | .. அரிசி .. | 15 22 .. | 0 14 |

இரண்டாம் அட்டவணை

| இல. | பத்தி 1<br>விபரம் | பத்தி 2<br>முதலாம் அட்டவணையில் 3 ம் பத்தியில் விபரிக்கப்பட்டிருக்கும் குறித்த விலையிலும் பார்க்க ஒரு மொத்த வியாபாரி நிகர அந்தர் ஒன்றுக்கு சேர்த்து விற்கும் விலை<br>ரூ. ச. | பத்தி 3<br>முதலாம் அட்டவணையில் 4 ம் பத்தியில் விபரிக்கப்பட்டிருக்கும் குறித்த விலையிலும் பார்க்க ஒரு சில்லறை வியாபாரி நிகர ருத்தல் ஒன்றுக்கு சேர்த்து விற்கும் விலை<br>ரூ. ச. |
|---|---|---|---|
| 1. | வவுனியா தெற்கு இறைவரி உத்தியோகத்தர் (தமிழ்) பிரிவுக்குச் சேர்ந்த மருதங்குளம், மருதமடு, இராசேந்திரன்குளம், வவுனியா தெற்கு பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் (சிங்கள) பிரிவுக்குச் சேர்ந்த சூடுவெந்தபுலவு, மருதமடுவைத் தவிர்ந்த உலுக்குளமும் .. .. .. .. | 0 25 | 0 01 |
| 2. | வவுனியா தெற்கு பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் (தமிழ்) பிரிவுக்குச் சேர்ந்த பெரியபுளியங்குளம், வாகைகட்டின-ஒலுக்குளம், வாழைவைத்தகுளம்; வவுனியா தெற்கு இறைவரி உத்தியோகத்தர் (சிங்கள) பிரிவில் உலுக்குளம் பகுதிக்குச் சேர்ந்த மருதமடு கிராம விதானையின் பகுதி .. .. | 0 50 | 0 01 |
| 3. | வவுனியா வடக்கு பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவுக்குச் சேர்ந்த நெடுங்கேணி, மாங்குளம், ஒலுமடு, கனகராயன்குளம், புளியங்குளம் .. | 0 50 | 0 01 |
| 4. | வவுனியா வடக்கு பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவுக்குச் சேர்ந்த பரந்தன், மணவாளன் பட்ட முறிப்பு, தண்டுவான் கச்சிலமடுவும், ஊஞ்சல் கட்டியும் .. .. .. .. | 0 75 | 0 02 |
| 5. | வவுனியா கரைதுறைப்பற்று பெரும்பாக இறைவரி, உத்தியோகத்தர் பிரிவுக்குச் சேர்ந்த முள்ளியவளை, தனியூற்று, முல்லைத்தீவும் வெள்ளைமுள்ளி வாய்காலும் | 1 00 | 0 02 |
| 6. | வவுனியா கரைதுறைப்பற்று பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவுக்குச் சேர்ந்த குமுளமுனை, புதுக்குடியிருப்பும் அம்பலவன்பொக்கணையும் .. | 1 25 | 0 02 |
| 7. | வவுனியா கரைதுறைப்பற்று பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவுக்குச் சேர்ந்தகொக்கிளாயும் கொக்குதொடுவாயும் .. .. | 1 50 | 0 03 |

**குறிப்பு.**—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருட்களை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகள் அல்ல ; இவை **ஆகக்கூடிய** விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருள்களை விற்றலாகாது.

---

உணவு விலைக் கட்டளை இல. MT/6/60.

உப உணவுப் பொருட்கள் (மசூர் பருப்பு.)

## 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்
## கட்டளை நீக்கம்

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவோடு 3 (2) ம் பிரிவுடன் சேர்த்து வாசிக்குமிடத்து, உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரிக்கு (உணவு) அளிக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு ஹெட்டிகே டொன் டியுடர் போதிதாஸ ஆகிய யான் இக்கட்டளையால் 1960 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 1 ம் திகதி வெளியான 12,051 ம் இலக்க இலங்கை அரசாங்க அதிவிசேஷ வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட, 27.1.60 திகதியைக் கொண்ட மசூர் பருப்பு சம்பந்தப்பட்ட MT/2/60 ம் இலக்க உணவு விலைக் கட்டளையை உடனடியாகவே நீக்கிவிடுகிறேன்.

1960 ம் ஆண்டு ஏப்ரில் மாதம் 25 ந் திகதி மு.ப. 10 மணிக்கு மாத்தறைக் கச்சேரியில் கையொப்பமிடப்பட்டது.

எச். டி. டீ. போதிதாஸ,
உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு),
மாத்தறை டிஸ்திறிக்.

---

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.